# தொழில் மந்திரி கிரி திண்டாட்டம்!


REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் : அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ் : ஒரு அணா | சென்னை : ஆனி 28௳ திங்கள் (12—7—54) | மலர் : 2
இலங்கையில் 10 சதம் | வெளியூர் : ஆனி 29௳ செவ்வாய் (13—7—54) | இதழ் : 24


# மாநிலங்களைத் திருத்தி அமைப்பதில்!

—( : )—

## 'ஒரு நாட்டு மக்கள் போல செயல்படக் காணோமே!'

## 'சுதந்திர நாடுகள் ஒன்றோடொன்று போரிடுவதுபோல்உள்ளதே!'

## 'ஓரே கட்சியினர் ஒருவரை ஒருவர் வசை பாடுகின்றனரே!'

## 'அரசியல் சட்டத்தை அலட்சியப்படுத்தி விட்டனரே!'

## 'ஏக இந்தியா' சரிவது கண்டு பண்டி-தர் குமுறல்!

மாநிலங்களைத் திருத்தி அமைக்கும் பிரச்சினையில் காங்கிரஸ் கட்சியினர் வெளிப்படையாகக் கலந்து கொள்ளுதல் கூடாது என ஏற்கெனவே அகில இந்திய காங்கிரஸ் சுற்றறிக்கை விட்டிருக்கிறது.

அவ்வறிக்கையை மதித்து நடக்காது, பல காங்கிரஸ் கட்சியினர் மீறி வருகின்றனராம். அவர்கள் செயல் பற்றி பண்டிதர், காங்கிரஸ் தலைவர் என்ற முறையில் அறிக்கை ஒன்று விடுத்துள்ளார். அதில், கட்டளையை மீறும் காங்கிரஸ் கட்சியினர் போக்கைக் கண்டித்திருப்பதுடன், பிரச்சினை பெற்றுள்ள பயங்கரத் தன்மையையும் விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளார்.

அப்பகுதி அப்படியே தரப்படுகிறது :—

"காங்கிரஸ் குழுவின் அறிவிப்புகள் எவ்வாறு மதித்து நடக்க வேண்டுமோ, அவ்வாறு, காங்கிரஸ் கட்சியினரால் மதித்து நடக்கப்படவில்லை. இந்தக் கிளர்ச்சிகளில், சில காங்கிரஸ்காரர்கள், சில சந்தர்ப்பங்களில், ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ளவும் முனைந்துள்ளனர். இது கண்டு நான் வருந்துகிறேன்."

"இப்படிக் கிளர்ச்சி செய்வது பெருமளவில் தென்இந்தியாவில் மட்டுமே ஆரம்பத்தில் காணப்பட்டது; ஆனுல் இப்போது இந்தத் தொத்து நோய் இந்தியா முழுவதிலும் பரவிவிட்டது. எல்லாவிதமான கோரிக்கைகளும் எழுப்பப்பட்டு, திகைப்பூட்டும் அக்கோரிக்கைகளுக்காக, கடுமையான முறையில் கிளர்ச்சியும் செய்யப்படுகிறது"

"நாட்டிலே பெரும்பான்மை மக்கள் ஏதோ பெரிதான ஒன்று தேவை என நினைத்துத் துன்புறுகிருர்கள்; இயற்கையாகவே அந்தப் பெரிய கோரிக்கை மற்றவர்களின் உரிமைகளைப் பறிப்பதாகிறது; அதன்காரணமாக மக்களிடையே மோதுதல் ஏற்படுகிறது; இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் குற்றச் சாட்டுகளும் எதிர்க் குற்றச்சாட்டுகளும் அக்கடக்காகக் கிளம்புவதுடன் அச்சுறுத்தலும் ஏற்படுகிறது"

"உலகில் சுதந்திர நாடுகளும், எதிரி நாடுகளும்தான் விரோத மனப்பான்மையுடன் இருக்கின்றன என்பதை எவரும் காணலாம்."

"ஒரே நாட்டில் வாழும் ஒரு மாநிலத்தைச் சேர்ந்த மக்கள், மற்றொரு மாநில மக்களைப் பயமுறுத்துகின்றனர்; இழிவாகப் பேசுகின்றனர்; அதுமட்டுமல்லாமல், ஒருவர், மற்றொருவர் அன்னிய நாட்டைச் சேர்ந்தவர் போலவும், சூழ்ச்சிக்காரர்கள் போலவும் பேசுகின்றனர்."

"நாட்டுக்கு சுதந்திரம் வேண்டுமென்று பாடுபட்டதையும், காங்கிரஸ் இயக்கத்தையும் மறந்துவிட்டனர் நமது தற்போதைய அரசியல் சட்டத்தையே அலட்சியம் செய்கின்றனர்."

## அமெரிக்காவின் மற்றோர் அச்சுறுத்தல்

கப் பூமின் டோனின் யோசனை நல்லெண்ணம் காணப்படாதவரையில், அமெரிக்கா, இந்தோ-சீனப் பேச்சுக்களில் கலந்துகொள்ளாது என்றும், தான் ஜினிவா மாநாட்டிற்கு வரப்போவதில்லை என்றும் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் டல்லஸ், பிரெஞ்சு பிரதமருக்கு அறிவித்துவிட்டார் என்று தெரிகிறது.

## பள்ளிகளில் பிரார்த்தனை வேண்டாம்!

"பிரார்த்தனைகளும், பூஜைகளும் ஒவ்வொரு வீட்டிலும் நடக்க வேண்டும்; அப்போது தான் சிறுவர்களுக்குக் கடவுள் பக்தி உண்டாகும்; பள்ளிக்கூடங்களில் தெய்வ வழிபாடு கூடாது; பல மதத்தினர் கூடும் அங்கு நடத்தினுல் வீண் சச்சரவுதான் ஏற்படும்; ஆகையால் கடவுளைத் தொழ வீடேதான் ஏற்ற இடம்."

—அருள்நெறி மாநாட்டில் ஆச்சாரியார்.

# 2,000 தொழிலாளர்கள் செய்த ஆர்ப்பாட்டம்!

## தொழிலாளர் முழக்கத்தில் அமைச்சர் குரல் அமிழ்ந்துவிட்டது!

## தக்க பாதுகாப்புடன் ம. பி. கவர்னரும் அமைச்சர்களும் வெளியேறினர்!

நாகபுரி, ஜுலை 11—

சர்க்காரால் மேற்கொள்ளப்பட்டிருக்கிற, தொழிலாளர் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தைத் துவக்கி வைப்பதற்காக, இங்குள்ள நகர மண்டபத்தில் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. மத்தியப் பிரதேச முதல் மந்திரி ரவி சங்கர் சுக்லா துவக்க விழா ஆற்ற இருந்தார்.

கூட்டத்திற்கு, ம. பி. கவர்னரும், யூனியன் சர்க்கார் தொழில் மந்திரி கிரியும், சுகாதார மந்திரி அமிர்த கௌரியும் வந்திருந்தனர்.

தொழிலாளர் இன்ஷ்யூரன்ஸ் ஏற்பாட்டில், தொழிலாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள கட்டணத் தொகை அளவைக் குறைக்க வேண்டியும், மருத்துவ வசதியை தொழிலாளர் குடும்பங்களுக்கும் விரிவாக்க வேண்டியும், 2,000-த்திற்குக் கூடுதலானத் தொழிலாளர்கள், நகர மன்றத்திற்குமுன் அமைதியாக ஆர்ப்பாட்டம் செய்தனர்.

துவக்க விழாவிற்குத் தலைமை தாங்கிய யூனியன் தொழில் மந்திரி கிரியின் பேச்சு, வெளியில், தொழிலாளர்கள் எழுப்பிய முழக்கத்திற்குமுன் எடுபடவில்லை. அவர் பேச்சின் பெரும் பகுதி, தொழிலாளர் முழக்கத்தில் அமிழ்ந்து போய்விட்டது.

முதல் மந்திரி, கவர்னர், மந்திரிகள், கிரி, அமிர்த கௌரி ஆகியோர் தக்க பாதுகாப்புடன், கூட்டத்தைவிட்டு வெளியேறினர்.

காங்கிரஸ் கட்சியின் கண்காணிப்பில் வளர்க்கப்பட்டு வரும் தேசிய தொழிற் சங்க காங்கிரஸ் நீங்கலாக, மற்றெல்லாத் தொழிற் சங்கங்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொண்டன.

### தேர்தல்

ஹைதராபாத் பிரதேச காங்கிரஸ் தலைவராக மல்லப்பா கொல்லர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இவர், கடந்த ஆறு மாத காலமாக பிரதேசக் காங்கிரஸின் பொதுக் காரியதரிசியாக இருந்தார்.

### இட மாற்றம்

சென்னை வானொலி நிலையம் மெரினு அருகே உள்ள புதிய கட்டிடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. இரவோடு இரவாக 100-பேர் வரையில் சேர்ந்து இயந்திரங்களை இடமாற்றம் செய்தனர் என்று தெரிகிறது.

# 'தென்னிந்தியாவில் இந்தி போதனு மொழியாவது ஒருக்காலும் முடியாது'

## 'பாட போதனை தமிழ் மொழியிலேயே நடைபெற வேண்டும்'

### கனம் சி. சுப்ரமணியத்தின் கருத்து

"பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பாட போதனை, தமிழிலேயே நடைபெற வேண்டும் என்பது என் கருத்து.

"தென்னிந்தியாவில் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இந்தி ஒருபோதும் போதனு மொழியாக இருக்க முடியாது. வட இந்தியாவில் மட்டுமே அது சாத்தியப்படலாம்.

"ஒரு கலாசார மொழியாக கல்லூரிகளில் ஆங்கிலத்திற்கும் சிறப்பான இடம் அளிக்கப்பட வேண்டும்.

"தமிழ் மொழிக்கு முக்கியத்வம் அளிக்க சர்க்கார் ஆவலாக இருக்கிறது. இங்கு நிறைவேற்றப்படும் தீர்மானங்களை ஆழ்ந்த அக்கரையுடன் கவனிப்பேன்."

என்று, சிதம்பரம், அண்ணாமலை சர்வ கலாசாலை பட்டமளிப்பு விழா மண்டபத்தில், பேராசிரியர் திரு. சோமசுந்தர பாரதியார் தலைமையில் நடைபெற்ற சென்னை மாகாண தமிழ் ஆசிரியர் மாநாட்டைக் கல்வி மந்திரி சி. சுப்ரமண்யம் ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

## ஆடு, கோழி பலியிடுதல் நியாயமாம்!

—

### மது படைப்பதும் நியாயந்தானு?

'பக்திக்கு முக்கியமானது மனத் தூய்மைதான்; ஆண்டவனுக்குப் பலி கொடுக்கும் வழக்கம் தமிழ் நாட்டில் உண்டு; சிலர் அதைப் பழிக்கின்றனர்; சுத்தமான மனதுடன் ஒருவன் பிராணிகளைப் பலி கொடுத்தால், அவன் உண்மையான பக்தனே ஆவான்."

'பலி கொடுப்பது தவறென்று சிலர் பழித்துப் பேசி வரும் பழக்கத்தை விட்டுவிட வேண்டும்; கடவுள் எதிரில் தேங்காய் உடைப்பதும், பூசணிக்காய் உடைப்பதும்கூட ஆடு, கோழி வெட்டுவதைப்போல், 'பாபச் செயல்' என்று சொல்லலாம். ஆண்டவனை வழிபடுவதில் பல முறைகள் இருக்கலாம் என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும்."

—அருள்நெறி மாநாட்டில் ஆச்சாரியார்.

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ்

சென்னை 12—7—54 திங்கள்


# வெவ்வேறு ஆட்கள்! — ஆனால், முறை ஒன்றே!

உத்திர பிரதேசத்தில் ஆட்சி புரிவது காங்கிரஸ் கட்சி!

திரு—கொச்சியில் ஆட்சி புரிவது மக்கள் சோஷலிஸ்டு கட்சி!

உத்திர பிரதேச சட்டசபையில், மக்கள் சோஷலிஸ்டு கட்சி எதிர் கட்சியாக இயங்கி வருகிறது. ஆனால் திரு—கொச்சியிலோ, ஆளும் கட்சியாக இருந்து வருகிறது, அக்கட்சி!

உத்திர பிரதேச சர்க்கார், விவசாயிக்குக் கொடுத்து வரும், பாசன நீருக்கான வரியை உயர்த்தி இருக்கிறது. அவ்வரியை, ஏழை விவசாயிகளால் தாங்க முடியாது எனக் காரணம் காட்டி, 'வரி கொடா இயக்கம்' துவங்கப்பட்டு இருக்கிறது, எதிர்க்கட்சியான மக்கள் சோஷலிஸ்டு கட்சி.

உத்திர பிரதேச சர்க்கார் உயர்த்தியுள்ள நீர் வரி, விவசாய மக்களின் சக்திக்குக் கூடுதலானதாக இருக்கிறதா இல்லையா என்பதைக் குறித்த ஆராய்ச்சியில் நாம் இறங்கத் தேவை இல்லை. இதைப் போன்றே, சர்க்கார் வரி உயர்வை எதிர்த்து, வரி கொடாமையைத் துவங்கியுள்ள மக்கள் சோஷலிஸ்டு கட்சியின் செயலில் நியாயமிருக்கிறதா இல்லையா என்பதைக் குறித்தும் நாம் கவலை கொள்ள வேண்டியதில்லை.

உத்திர பிரதேச சர்க்கார், வரி கொடா இயக்கத்தில் பங்கு கொண்ட நூற்றுக்கணக்கான விவசாயிகளையும், அக்கட்சித் தலைவரான டாக்டர் மனோகர் லோஹியாவையும் கைது செய்து காவலில் வைத்திருக்கிறது. சட்டங்கள் மீறப்பட்டால், அவ்வாறு மீறினவர்கள் மீது, சட்டம் கோரும் தண்டனையைத் தருவதுதான் நியாயமானது என எந்த ஒரு சர்க்காரும் வாதிடத்தான் கிளம்பும், அதைப் போலவே, சட்டங்களை உடைக்க முன் வருவோரும், 'பேச்சுரிமை செயலுரிமை' எனும் குடி உரிமையை நிலைநாட்டுவது பற்றிப் பேசத்தான் பேசுவர். மேற்கூறிய நியாயங்களைத்தான் இரு சாராரும் காட்ட முற்படுவர்—காட்டியும் உள்ளனர்.

சட்ட புத்தகங்களில் உள்ள சட்டங்கள் அனைத்துமே நிலையானவை அல்ல காலத்திற்கும், சமூக நிலைமாற்றத்திற்கும் ஏற்ப சட்டங்களும் மாறக்கூடியனவேயாகும்.

காலத்தாலும், நிலைமை மாற்றத்தாலும், செல்லுபடியற்றதாகப்போன சட்டங்கள் ஏராளமாக இருக்கின்றன. அவைகளின் இடங்களை, சமூகத் தேவைகளை வகைப்படுத்த உதவுவதற்காக, புதிதாக உருவாக்கப்பட்டச் சட்டங்கள் பிடித்துக்கொண்டும் உள்ளன. சட்டங்கள் சாவதும், பிறப்பதும், சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களைப் பொறுத்த ஒன்றாக இருக்கிறது. சிறந்த,

விசாரணை இல்லாமல் ஒருவரை யாதொரு காப்புக் கைதியாக சிறையில் அடைத்துவைக்கிற சட்டத்தை, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியத் துணைக் கண்டத்தில் சர்வ சாதாரணமாகக் கையாண்டு வந்தது. அதைச் 'சட்டமில்லா சட்டம் அதை உடைத்தெறிவதே எம் திட்டம்' என, அன்று ஒருநாள் காங்கிரஸ் கட்சியினர் கர்ஜித்தனர். ஆனால் வெள்ளையர் வெளியேறி வந்தும், அதே தடுப்புக் காவல் சட்டத்தை, கொஞ்சமும் வெட்கப்படாமல், எதற்கெடுத்தாலும், எவர் விஷயத்திலும் கையாண்டு வருவதோடு, அச்சட்டமில்லா சட்டத்தின் உதவி இல்லாமல் எம்மால் ஒரு விநாடியும் ஆளமுடியாது என்றும், காங்கிரஸ் ஆளவந்தார்கள் மார்தட்டிக் கொக்கரித்து வருகிறார்கள்.

தடுப்புக் காவல் சட்டத்தை வெள்ளையர் உபயோகித்தால் அநியாயம்! ஆனால், அதே சட்டத்தை தாங்கள் உபயோகித்தால், நியாயம்! எனக் காங்கிரஸ் ஆளவந்தார்கள் அறம் பேசுகிறார்கள், அறம்!

தங்கள் ஆட்சிக்கு எதிராக, எவர் பேச நினைத்தாலும் அவர் வெளிப்படையாக நினைத்ததைக் கூறுவதற்கு முன்னதாகவே, அவரைத் தடுத்து, சிறையில் தள்ளத்தான் பிரிட்டிஷ் ஆளவந்தார்கள், அத்தடுப்புக்காவல் சட்டத்தைக் குடிமக்கள்மீது ஏவி வந்தார்கள்! அவர்கள் நடந்தது போலத்தான், அதே காரணத்துக்காகத்தான் அதே சட்டத்தை, காங்கிரஸ் ஆளவந்தார்கள் குடிமக்கள் மீது ஏவி வருகின்றனர்!

குடி மக்களைப் பொறுத்த வரையில் சட்டத்தின் விளைவு ஒன்று போலத்தான் இருக்கிறது; அதாவது, குடி மக்களின் உரிமையைக் கொலை செய்து விடுகிறது!

தடுப்புக் காவல் சட்டம், அதைக் கையாளுவோரின் நிறத்தினால், வெவ்வேறு விளைவுகளை கொடுப்பதாக இல்லை! ஒரே மாதிரியான, குடி மக்களின் உரிமைக்கு உலைவைத்துவிடும் பயனைத் தருவதாகத்தான் இருக்கிறது!

எனவே, நம்மவர், அன்னியர் என்பது தடுப்புக்காவல் சட்டத்தில் இல்லை! அப்பாகுபாடு அதற்குத் தெரியவும் தெரியாது! சிறக,

எல்லா நேரங்களிலும் சட்டத்தை மதித்து நடப்பது, நிலையான நியாயமாகவும், சிற்சில சமயங்களில் குடிமக்களால் சட்டங்கள் உடைத்தெறியப்படுவது விரும்பத்தக்கதும் வரவேற்கத்தக்கதுமான நியாயமாகவும் இருப்பது இயல்பாகும்.

மக்களின் குரலுக்குச் செவிசாய்க்க மறுத்து, ஆட்சிபீடமேறியுள்ள மதோன்மத்தர்கள், சட்டங்களின் துணைகொண்டு, மக்களை வாட்டி வதைக்க முன்வரும்பொழுது, சட்டங்களை உடைத்தெறிந்து ஆட்சிப் பீடத்தில் உள்ளவர்களுக்கு, அறிவு புகட்ட மக்கள் முனைந்த சம்பவங்கள், வரலாற்றுச் சுவடிகளில் மலிந்து கிடக்கின்றன.

மக்களுக்குச் செய்யவேண்டிய கடமையை மறந்து, கொடுங்கோலோச்சும் சுயநல பிண்டங்களாக ஆளவந்தார்கள் மாறிவிட்ட பின்னரும், அதை ஏனென்று தட்டிக் கேட்க மக்கள் சீறி எழவில்லையானால், அக்காட்டிலும் கடும் புலி வாழும் காடு மேல் என்ற நிலை ஏற்படுவதோடு, அத்தகு நாட்டு மக்களும் மாக்கள் நிலையில் வலம்பல ஆண்டுகாலம் இருக்க வேண்டிய இழிநிலை பெற்றுள்ளதையும், வரலாறு சுட்டிக் காட்டுகிறது.

வெள்ளையர் ஆட்சி காலத்தில் சட்டங்களை உடைத்தெறியுங்கள் என்ற மோதிலால் நேருவின் திருக்குமாரர் இன்று 'சட்டங்களை மீறுவதை சகிக்க முடியாது' எனச் சங்கநாதம் செய்கிறார்! அடக்குமுறைகளை அடுக்கடுக்காக ஏவுங்கள் என, மாநிலங்களில் உள்ள காங்கிரஸ் ஆளவந்தார்களுக்கு, சொல்லாமல் சொல்லி ஊக்கமும் மூட்டுகிறார்!

புரட்சிகரமாக வண்டிதா மாறி இருக்கிறார்—இல்லை—வீழ்ச்சியுற்றிருக்கிறார்!

அவருக்கு ஏற்பட்டுள்ள மனமாற்றத்திற்கான காரணம் அவருக்கு ஏற்பட்டுள்ள நிலை மாற்றந்தான்! அதாவது அன்று அவர் விடுதலைப்படை வீரராக இருந்தார்; ஆனால் இன்றோ அவர் பதவிகாதராக உள்ளார்! அதுவும், பொறுப்புள்ள பெரிய பதவி!

எனவே, மாமியார் உடைத்தால் மண்குடம்; மருமகள் உடைத்தால் பொன்குடம் என்ற போக்கில், சட்ட உடைப்புக்கு விளக்கம் தருகிறார், விவேகி!

உத்திர பிரதேசத்திலே உள்ள காங்கிரஸ் சர்க்கார் சட்டத்தை மதிக்காது நடக்கிறார்கள் எனப் புகல் கூறி, மக்கள் சோஷலிஸ்டு கட்சியினரை சிறையில் தள்ளிப் பூட்டுகிறது. இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலும் சிதறிக்கிடக்கிற, அக்கட்சியினர் காங்கிரஸ் சர்க்காரின் அடக்குமுறை போக்கைக் கண்டிக்கின்றனர்! குடி உரிமை கொலை செய்யப்படுகிறதே என முகாரியும் பாடுகின்றனர்!

திரு-கொச்சியில் உள்ள மக்கள் சோஷலிஸ்ட் கட்சி சர்க்கார், பிழைவு பட்டுக் கிடக்கும் தொழிலாளர்களிடை சமரசம் காண, தேவிகுளம் சென்ற இருந்தத் தமிழர் காங்கிரஸ் தலைவர்களை, தடை உத்திரவை மீறினார்கள் எனப் புகல் கூறி, சிறையில் தள்ளி இருக்கிறது! அதுவுமல்லாமல மக்கள் மீது அடக்குமுறை பாணத்தைத் தொடுத்தும் இருக்கிறது!

தங்கள் கட்சி சர்க்கார் மேற்கொண்டுள்ள அடக்குமுறை, குடி உரிமையை பறிக்கும் திருவிளையாடல், மக்கள் சோஷலிஸ்டு கட்சியினர் கண்களுக்குப் புலனாகவில்லை திரு—கொச்சியிலும் மக்களின் குடி உரிமை காக்கப்பட வேண்டுமே என்ற கருத்தும் பிறக்கவில்லை அக்கட்சியினருக்கு! உத்திர பிரதேசத்தில் தங்கள் குடி உரிமை பறிக்கப்படுவதுதான், அவர்களுக்குப் பெரிதாகத் தெரிகிறதே யல்லாது, மக்கள் குடி உரிமையை, தங்கள் கட்சியினரே ஆட்சிபீடத்தில் உட்கார்ந்து கொண்டு திரு—கொச்சியில் சூறையாடி வருவது கூடாது—கண்டிக்கத்தக்கது என்ற நினைப்பு அக்கட்சியினருக்கு உண்டாகக் காணோம்!

ஆட்சிபீடத்தில் அமர்ந்திருக்கும் ஆட்கள்தான் வெவ்வேறாக இருக்கின்றனர்! ஆனால், அவர்கள் மேற்கொண்டுள்ள முறை, ஒன்றாகவேதான் இருக்கிறது!

இரு இடத்திலும் மக்களின் குடி உரிமை கொலை செய்யப்படுகிறது! ஒரு இடத்தில் காங்கிரஸ் ஆளவந்தார்களால்; மற்றொரு இடத்தில் மக்கள் சோஷலிஸ்ட் கட்சியினரால்!

இரு சர்க்கார் அடக்குமுறை போக்கையும் கண்டிக்கிறோம்!

# திருநெல்வேலி மாவட்டத்தில் வளையல் உற்பத்திசாலைகள்!

— (:) —

## சர்க்கார் ஆரம்பிக்க ஆலோசிக்கிறது

### கடல் சங்குகளைப் பயன்படுத்தத் திட்டம்!

திருநெல்வேலி மாவட்டத்தில் சங்குகளிலிருந்து வளையல்கள் செய்ய குடிசைத் தொழில்களை அமைப்பதை பற்றி சென்னை சர்க்கார் ஆலோசனை செய்கிறது என்று தெரிகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தின் முன்னேற்றத்திற்கு இதன் மூலம் உதவ முடியுமா என்று யோசிப்பதாக சென்னை அமைச்சர் பக்தவத்சலம் பத்திரிகை நிருபர்களிடம் கூறினார்.

இப்போது திருநெல்வேலி மாவட்டத்தில் கிடைக்கும் கடல் சங்குகளை மேற்கு வங்கத்திற்கு நேரடியாக ஏற்றுமதி செய்ய சென்னை சர்க்கார் ஒழுங்கு செய்து கொண்டிருக்கின்றனர்.

## புகையிலை ஏற்றுமதி குறைகிறது!

### தூரக்கிழக்கு நாடுகளில் மார்க்கெட் கிடைக்குமா?

புகையிலை குழு சுற்றுகிறது!

இந்தியாவில் உற்பத்தியாகும் புகையிலையை அதிகமாக வாங்கும் நாடு பிரிட்டன் எனச் சொல்லப்படுகிறது. சென்ற ஏப்ரல் முதல் இந்த ஜனவரி வரை பத்து மாதங்களில், பலவகையான இந்தியப் புகையிலையில் 2,49,59,000 பவுண்டுகள் பிரிட்டன் வாங்கியுள்ளது சென்ற ஆண்டு, இந்தப் பத்துமாத காலத்தில் 2,99,29,000 பவுண்டுகள் இங்கிலாந்து வாங்கிற்று.

ஜப்பான் இரண்டாவதாக அதிகம் புகையிலை வாங்குகிறது இந்த ஆண்டு 1,00,61,000 பவுண்டுகளும், சென்ற ஆண்டில் 1,45,07,000 பவுண்டுகளும் வாங்கிற்று.

புகையிலைக்கு மார்க்கட் தேடி, ஸ்ரீராமய்யா, எம். பி தலைமையில் ஒரு குழு தூரக்கிழக்கு நாடுகளுக்குச் சென்றுள்ளது—அந்த நாடுகளிலும், மத்திய கிழக்குப் பிரதேசங்களிலும், இன்னும் சில நாடுகளிலும் இந்திய புகையிலைக்கு ஒரு நிரந்தர மார்க்கெட் இருக்கத்தான் செய்கிறது.

கடந்த காலத்தில் பிரிட்டன் ஸ்வீடன், நெதர்லாந்து, பெல்ஜியம், ஆப்பிரிக்கா, ஏடன், பாகிஸ்தான், எகிப்து, ரஷ்யா ஆகிய நாடுகள் இந்தியப் புகையிலையைப் பெற்று வந்திருக்கின்றன

சென்ற ஆண்டு ஏற்றுமதி செய்யப்பட்ட புகையிலையின் மொத்த மதிப்பு 11,06,28,000 ஆகும் இந்த ஆண்டில் 9,65,63,000 ரூபாய்தான் ஏற்றுமதி ஆகியுள்ளது. சுமார் ஒன்றரைக் கோடி ரூபாய் பெறுமான புகையிலை ஏற்றுமதி குறைந்துவிட்டது.

## ஆட்சேபம்

இந்திப் படமான 'ஆக்' என்ற இந்திப் படத்தைத் திரையிடக் கூடாது என லாகூரில் 5,000-க்கு மேற்பட்ட மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்களாம் "நம் கால்வாய்த் தண்ணீரை நிறுத்திய நாடு தயாரிக்கும் படத்தைப் பார்க்காதீர்கள்," என்று அவர்கள் ஒலி எழுப்பினராம்!

பீபி நகர் கொள்ளை வழக்கில் தண்டிக்கப்பட்ட ரஜாகர் தலைவரான ரஜ்வி, எரவாடா சிறைக்கு மாற்றப்பட்டிருக்கிறார் என்று அறிவிக்கப்படுகிறது.

## தஞ்சை மாவட்டத்தில் ஈ. வெ. கி. சம்பத், எஸ். அப்பாவு

★

**அம்மையப்பன்**

23—6—54 மாலை 7 மணிக்கு தி. மு கழகச் சார்பில கோவிந்தசாமி தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் திருவாரூர் கோவிந்தராஜ், எஸ். அப்பாவு ஆகியவர்கள் கழக கொள்கைகள் குறித்து பேசிய பின், தோழர் ஈ வெ. கி. சம்பத் புதிய கல்வித் திட்டம் ஒழிந்தது குறித்தும், தனி நாடு தேவை குறித்தும் பேசினார்.

**கட்டிமேடு**

24—6—54 மாலை 7 மணிக்கு தி மு கழகச் சார்பில தோழர் வி ஏ எம். சுல்தான் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் இளங்கோவன், எஸ். அப்பாவு கழகக் கொள்கைகள் குறித்துப் பேசியபின், தோழர் ஈ வெ. கி. சம்பத் தற்கால அரசியல் நிலை குறித்தும், திராவிட தனியரசு தேவை குறித்தும் பேசினார்.

**நீடாமங்கலம்**

27—6—54 மாலை 7 மணிக்கு தி. மு கழகச் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் தோழர் அருணசலம் தலைமையில் நடைபெற்றது. தோழர் எஸ். அப்பாவு புதிய கல்வித் திட்டம் ஒழிந்த மகிழ்ச்சி குறித்தும், கழகக் கொள்கைகள் குறித்தும் பேசினார் தோழர் ஈ. வெ. கி சம்பத் அரசியல் பொருளாதாரம் இவைகளில் மத்திய சர்க்காரின் ஆதிக்கத்தை எடுத்துக் காட்டி, தனியரசு தேவை குறித்துப் பேசினார்.

**திருச்சினம்பூண்டி**

30—6—54 மாலை 6 மணியளவில், தி. மு. கழகச் சார்பில் தோழர் அம்பில் தர்மலிங்கம் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் எஸ். அப்பாவு கழகக் கொள்கைகள் குறித்துப் பேசினார். தோழர் ஈ வெ. கி. சம்பத் அரசியல் பொருளாதார விடுதலை குறித்து விரிவுரையாற்றினார்.

## ஏற்றுமதி

தென் இந்திய வர்த்தக சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க சென்னைத் துறைமுகத்திலிருந்து கடலை, அவரை பருப்பு வகைகளை ஏற்றுமதி பட்டியலில் சர்க்கார் சேர்த்திருக்கின்றனர்.

## பயிற்சிக் கழகம்

பால் உற்பத்திக்கும், பாலின் தரத்தை நிர்ணயிப்பதற்கும், ஒரு பயிற்சிக் கழகத்தை சர்க்கார் உதவியுடன் பம்பாயில் இந்திய உணவு விவசாய கழகம் ஆரம்பித்து வருகிறதாம்.

# கழகச் செய்திகள்

## உடுமலைப்பேட்டை தி. மு. கழகம்

4—7—54 மாலை 6 மணியளவில் பொதுக் குழுக் கூட்டம் தோழர் கு. பழனியப்பன் தலைமையில் நடைபெற்றபோது, புது ஆண்டிற்கு தோழர்கள் வெ. காளியப்பன் செயலாளராகவும், கனகன் துணைச்செயலாளராகவும், மு. ரத்தினம் பொருளாளராகவும், 14 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## நெடும்பலம் தி. மு. கழகம்

5—7—54 இரவு 10 மணிக்கு கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் செயலாளர் டி. என். கல்யாணசுந்தரம் தலைமையில் நடைபெற்றபோது, புதிய கல்வித் திட்டத்தை கைவிட்டதற்காக காமராசரைப் பாராட்டியும், உழைப்பாளர் கட்சியின் தலைவரின் செயலைக் கண்டித்தும் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன. பின்னர் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்: செயலாளர்: டி. என். கல்யாணசுந்தரம்; துணைச் செயலாளர்கள்: க. வைத்திலிங்கம், செ. சுப்பையா; பொருளாளர்: பி கோபாலகிருட்டிணன்; மாவட்டப் பிரதிநிதி: என். பி வீரையன்; செயற்குழு உறுப்பினர்கள்: ஆர். திருவேங்கடம், ஆர். நடராசன், ஆர். சுப்பிரமணியன், என். பஞ்சநாதம், என். ராமசாமி, ஆ சொக்கலிங்கம்.

## மாயூரம் தி. மு. கழகம்

4—7—54 காலை 10 மணிக்கு செயற்குழுக் கூட்டம் தோழர் என். பட்டப்பா தலைமையில் நடைபெற்றது. அதுபோது 18—7—54ல் பொதுக் கூட்டம் நடத்துவதெனவும் கழகக் கட்டிட நிதி திரட்ட இயக்க நாடகம் ஒன்றை விரைவில் நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

## கம்பம் தி. மு. கழகம்

1—7—54 இரவு 9 மணிக்கு கார்திமதி நிலையத்தில் செயலாளர் கே. பி திருவேங்கடம் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் வரும், ஜில்லா போர்டு தேர்தலுக்கு புதிதாகப் புகுத்தியிருக்கும் ஓட்டுப் போடும் முறையைக் கண்டித்தும், தி மு. கழக ஆண்டு விழாவை சிறப்பாக நடத்துவது என்றும், மற்றும் கழகத்தின் வளர்ச்சிக்காக பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டதுடன் கம்பம் தி. மு. கழகக் கிளையின் ஜூன் முடிய உள்ள கணக்குகளையும் பரிசிலனை செய்து ஒப்புக் கொள்ளப்பட்டது.

## மங்கநல்லூர் தி. மு. க.

30—6—54 இரவு 7 மணியளவில் கழக உறுப்பினர் கூட்டம் தோழர் பி. வெங்கடகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றபோது உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்—செயலாளர்:— கே. ஆர். கோபாலகிருஷ்ணன்; துணைச் செயலாளர்: என். முத்தையன்; பொருளாளர்: என் பாலசுந்தரம்; மாவட்ட உறுப்பினர்: பி வெங்கடகிருஷ்ணன், செயற்குழு உறுப்பினர்கள்: ஆர் கிருஷ்ணமூர்த்தி, எ. எம். உசேன் எ. எம். இப்ராகிம், எம். எம் காசிம், எ. எம் அலி, டி நீலமேகம், ஆர் முத்துக்குமாரசாமி, பி சுந்தரமூர்த்தி, எம். சொக்கலிங்கம், சே. ஆர். செபாமன், எ. எம். காய்கம், என். நாகராசன், கே. கந்தசாமி, என். முருகையன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## வாலாஜாபேட்டை தி. மு. கழகம்

4—7—54 மாலை 7 மணிக்கு தோழர் ச. குமார் தலைமையில் கமிட்டி கூட்டம் நடைபெற்றபோது, செயலாளராக வட சிகாகரத்தினமும், துணைச் செயலாளராக கோபாலும், பொருளாளராக மு கண்ணனும், மாவட்டப் பிரதிநிதியாக நாகரத்தினம், கோபாலும், விளம்பர உறுப்பினர்களாக ராசகோபாலும், கிருட்டினனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## நரசிங்கபுரம் தி. மு. க.

30—6—54 இரவு 8 மணிக்கு கழகப் பணிமனையில், தோழர் என் சி பூபாலு தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெற்றபோது, செயலாளர் என். கே நல்லவாண்டு விலகுதல் ஏற்கக் கொள்ளப்பட்டு, புதிய செயலாளராக என். என். கோவிந்தசாமியை தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், தோழர்கள் என். கே. இராசு, என். கே. அங்கமுத்து, வேலப்புரம் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## பம்பாய் தி. மு. கழகம்

30—6—54 இரவு 8 மணியளவில் கழக அலுவலகத்தில் செயலாளர் எஸ். திபாகராசன் தலைமையில் கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றபோது, துணைச் செயலாளராக தோழர் இரா. மா. சின்னதோரசனும் செயற்குழு உறுப்பினராக தோழர் புத்தாசவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## குனியமுத்தூர் தி. மு. க.

4—7—54 காலை தோழர் சே. அ ராசமாணிக்கம் தலைமையில் தோழர் கோவை செழியன் 101 இடங்களில் கழகக் கொடியினை ஏற்றிவைத்தார்.

மாலையில், தோழர் கே. ஆர் சண்முகம் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் இரா. ஜோன்ஜுதன் ஆண்டறிக்கை வாசித்தார்; தோழர் தங்க — மாணிக்கம் வரவேற்புரை நிகழ்த்தினார்; தோழர்கள் சுப்பிரமணியன், ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் பேசினர்.

## ஆமதாபாத் தி. மு. க.

27—6—54-ல், செயலாளர் ப. ஆதிமூலம் தலைமையில் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, பம்பாய் மாநிலத் தில் மில் முதலாளிகள் கையாளும் ஆட்குறைப்புத் திட்டத்தை எதிர்த்தும், இத்திட்டத்தை எதிர்த்து உண்ணாவிரதமிருந்து வரும் தோழர்களைப் பற்றி ஆட்சியாளர்கள் இதுவரை கவனிக்காததைக் கண்டித்தும், இந்த அறப்போராட்டத்தில் ஒத்துழைத்த தி. மு. கழகத் தோழர்களைப் பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## குருகாட்டூர் தி. மு. கழகம்

1—7—54 இரவு 8-மணிக்கு செயலாளர் தலைமையில் உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—அ. பால்ராசு: செயலாளர்; மா. சேக்சு: துணைச் செயலாளர்; மு ச. மணிமொழியன்: மாவட்டப் பிரதிநிதி; சு. இந்திரன்: பொருளாளர்; செயற்குழு உறுப்பினர்களாக ஏழு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மணப்பாறை தோழர் குமாரவேல் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டதுடன், முக்கிய முடிவுகள் பல செய்யப்பட்டன.

## பெரியார் இராமசாமி நகர் தி. மு. கழகம்

பெங்களூர், ஜூலை 8—

4—7—54 கழகச் செயற்குழு கூட்டம் தோழர் அப்பாதுரை தலைமையில் நடைபெற்றபோது, பெரியார் இராமசாமி நகரில் கழக கட்டிடத்துக்கென 75 அடி நீளமும், 25 அடி அகலமுமுள்ள இடத்தில் கட்டிடம் எழுப்பி 26—12—46-ல் பெரியார் அவர்களால் குறிப்புக் கல் நாட்டி இருக்கும் இடத்தை, பெங்களூர் வட பகுதியில் தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்களின் இளங்குழந்தைகள் படிக்க அருகில் பள்ளிக்கூட மில்லாததால் அக்குழந்தைகளின் முன்னேற்றம் கருதி நிதி வசூல் செய்து மேற்கண்ட கழக கட்டிடத்தை ஒரு "ஆரம்பபாடசாலை" கட்டுவதென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## இலங்கை தி. மு. கழகம்

### சுற்றறிக்கை

"இலங்கை தி மு. க. கிளைகளின் தேர்தல் கால முடிவு நாள், ஜூலை 15 என்று முன்னர் அறிவித்திருந்தேன். இப்பொழுது சில கிளைக் கழகங்களும், கழகப் பேச்சாளர்களும் வேண்டிக் கொண்டதன்மீது தேர்தல் கால முடிவை, 1—8—54 வரை நீடிக்கப்பட்டிருக்கிறது: ஆகஸ்டு முதல் தேதிக்கு மேல், தேர்தல் காலம் எவ்வித காரணத்தை முன்னிட்டும் நீடிக்கப்பட மாட்டாது; (தேர்தல் நடைபெறாத) கிளைக் கழக அன்பர்கள் தேர்தலை நடத்தி கழக ஒப்புதலோடு நடத்தி முடித்துவிட வேண்டுமெனப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்," என்று இலங்கை தி மு. க. பொதுப்பாளர் இரா. அதி. மணி கேட்டுக் கொள்ளுகிறார்.

## குருவிக்கரம்பை தி. மு. கழகம்

6—7—54ல் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் 26—6—54ல் நடைபெற்ற பொதுக் கூட்டத்தின் வரவு—செலவு கணக்கு பரிசிலனை செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதுடன், 19—7—54 ல், ஓர் பொதுக் கூட்டம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

## பிள்ளாதுரை தி. மு. க.

6—7—54 மாலை 7 மணிக்கு செயற்குழுக் கூட்டம் தோழர் பெ. முருகேசன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர் சி. ஆறுமுகம் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், இம்மாத இறுதிக்குள் பொதுக்கூட்டம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

## சங்கனுங்குளம் தி. மு. க.

27—6—54ல் கழகச் சார்பில் தோழர் சித்திரைபுத்திரன் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எம். ஆர் கணேசன், பிச்சையா ஆகியோர் பேசினர். இறுதியில், மணப்பாறை குமாரவேல், சங்கனுங்குளம் கழக உறுப்பினர் அருணாசலம் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும்; நாத்துக்குடி, கல்லக்குடி வழக்குகளை வாபஸ் வாங்குமாறு கோரியும்; புதிய கல்வித் திட்டத்தை ஒழித்த காமராசரைப் பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## குஞ்சாண்டியூரில் தி. மு. கழகம் அமைப்பு

குஞ்சாண்டியூரில் (சேலம் மாவட்டம்) தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் க. கு. சின்னசாமி தலைமையில் நடைபெற்றபோது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்: செயலாளர்: கே. என். கோபால்; துணைச் செயலாளர்: கே. என். வெங்கடாசலம்; பொருளாளர்: கே. கே. ராமசாமி; கமிட்டி உறுப்பினர்கள்: பி. கோபால்: என். பெருமாள்; ஏ. சின்னசாமி, என் பெருமாள், பி. பழனியப்பன், எம். அய்யாத்துரை, கே. என். பெரியசாமி, எம். ஏ. குன்னுசாமி, என். வெங்கடாசலம், கே. எல். அங்கப்பன். துவக்க விழா பொதுக் கூட்டத்தை விரைவில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

## சிவாயம் தி. மு. கழகத் துவக்க விழா

3—7—54 மாலை 5 மணிக்கு தோழர் ஆர். பாலகுருசாமி தலைமையில் கழகத் துவக்க விழா நடைபெற்றது. தோழர்கள் சி. பி. சிற்றரசு, தில்லை-வில்லாளன், சொக்கலிங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பின்னர், உழைப்பாளி கட்சித் தலைவரின் போக்கைக் கண்டித்தும், நாத்துக்குடி சதிவழக்கை வாபஸ் பெறுமாறு சர்க்காரைக் கோரியும், புது மாதிரியான வாக்கெடுப்பு முறையை ரத்து செய்து பழைய முறையை அமுலாக்க வேண்டுமென்று அரசாங்கத்தை கேட்டுக் கொண்டும், புதிய கல்வி திட்டத்தை வாபஸ் பெற்ற காமராசரைப் பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## தென் திருப்பேரையில் தி.மு.க. பொதுக்கூட்டம்

6—7—54 இரவு 7-30-க்கு, வ. உ. சி திடலில் தி மு. கழகச் சார்பில், தோழர் டி. கே. என். பன்னீர்செல்வம் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. நாத்துக்குடி தோழர்கள் என். நடராசன், எம். ரத்தினமும் மற்றும் பலர் பேசினர்.

# மும்முனைப் போர் முழக்க நாள்

## ஜூலை 15-ல் நாடெங்கும் கொண்டாடுக!

★

1953 ஜூலைத் திங்கள் 15-ம் நாள்! திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றில் குறிப்பிடத்தகுந்த சிறப்பிற்குரிய நன்னாள்!

'ஆச்சாரியார் குலத் தொழில் கல்வித் திட்ட எதிர்ப்புப் போராட்டம்', 'கல்லக்குடிப் பெயர் மாற்றப் போராட்டம்', 'நேருவின் ஆணவ மொழி எதிர்ப்பு இரயில் நிறுத்தப் போராட்டம்' ஆகிய மூன்று போராட்டங்களையும் திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கித் திறம்பட நடத்திக் காட்டி வெற்றி வாகை சூடியது 1953 ஜூலைத் திங்களிலாகும்.

1953 ஜூலை 14-ம் நாள் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தலைமையில் அமைந்த போராட்டப் படையினர் ஆச்சாரியார் குலத் தொழில் கல்வித் திட்டத்தை எதிர்த்துப் போராட்டத்தைத் துவக்கினர்.

1953 ஜூலை 15-ம் நாள் தோழர் மு. கருணாநிதி அவர்கள் தலைமை தாங்கிய போராட்டப் படையினர் 'டால்மியாபுரம்' என்ற இரயில் நிலையத்தின் பெயரைக் 'கல்லக்குடி' என்று மாற்றும் போராட்டத்தைத் துவக்கினர்.

1953 ஜூலை 15-ம் நாளில் தமிழகமெங்கணும் உள்ள கிளைக் கழகத் தோழர்கள் இரயில் நிறுத்தம் செய்து திராவிடத்தில் வளர்ந்து வரும் சக்தியின் ஆற்றலையும், அளவையும் ஆணவ மொழி பேசிய பண்டித நேருவுக்கு உணர்த்தினார்கள்.

கழகம் நடத்திய மும்முனைப் போராட்டங்களில் பெற்ற வெற்றியினை நினைத்து மகிழவும், பெறவேண்டிய வெற்றியினை நினைத்து ஊக்கம் பெறவும், கிளைக் கழகத் தோழர்கள் ஊர்தோறும் இவ்வாண்டு ஜூலை 15-ம் நாளை மும்முனைப் போர் முழக்க நாளாகக் கொண்டாடும்படி பொதுச்செயலாளர் அவர்கள் கேட்டுக்கொள்கிறார்கள்.

கழகக் கட்டிடங்களிலும், பொது இடங்களிலும் புதுக் கொடி ஏற்றிவைத்தல், ஊர்வலங்கள் நடத்துதல், பொதுக்கூட்டங்கள் கூட்டுதல், போராட்டங்களின் வரலாற்றை விளக்கித் துண்டு அறிக்கைகள் வெளியிடுதல், கூட்டங்களில் போராட்டங்களின் அடிப்படைக் கருத்துக்களையும், கழகத் தோழர்கள் பட்ட கஷ்ட நஷ்டங்களையும் விளக்கிக் கூறி, போராட்டத்தில் கலந்துகொண்ட வீரர்களுக்கு நன்றி தெரிவித்தல் ஆகிய முறைகளில் ஜூலை 15-ம் நாளைக் கொண்டாடும்படி கிளைக் கழகத்தார் எல்லோரும் வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

அரசியலாரின் அனுமதி பெற்று நடத்த வேண்டிய பொதுக்கூட்ட ஊர்வலங்களை அனுமதி பெற்று நடத்தவும், அமைதி—கண்ணியம்—கட்டுப்பாடு ஆகியவை குலையாமல் காத்துக்கொள்ளவும் ஆன முறைகளில் ஜூலை 15-ஐக் கொண்டாடுவீர்களாக!

தலைமை நிலையம்
சென்னை-13
6—7—54

இரா. நெடுஞ்செழியன்,
துணைச் செயலாளர்,
திராவிட முன்னேற்றக் கழகம்.

# ஜயினக் கோயில்களில் தீண்டாதார் நுழைய முயற்சி

## அதைக் குலைக்க மார்வாரிகள் சல்லடம் கட்டுகின்றனர்!

இந்தூர், ஜூலை 11—

தீண்டப்படாதோர் எனக் கூறப்படும் மக்களுக்கு இங்குள்ள ஜயினக் கோயில்களில் நுழைய, உரிமை மறுக்கப்பட்டு வருகிறது இம் மாசைத் துடைத்துக்கொள்வதற்காக, இங்குள்ள அரிசன் சேவை சங்கம், ஜூலை 15-ல் ஜயினக் கோயில்களில் நுழைவது எனத் தீர்மானித்து இருக்கிறது.

முதலாவதாக, மார்வாரிகளின் திகம்பர ஜயின் கோயிலுக்குள் மட்டுமே நுழைவது என, மேற்படி சங்கம் முடிவு கட்டி இருந்தது. இப்பொழுதே, ஏனைய ஜயினக்கோயில்களுக்குள்ளும் நுழைவது என முடிவிற்கு வந்திருக்கிறது!

இதுகண்டு, அக்கோயில்களின் உரிமை கொண்டாடும் மார்வாரிகள் ஒன்றுகூடி, அரிசன் நுழைவைத் தடுப்பதற்கான, செயற்குழு ஒன்றை உருவாக்கி இருக்கிறார்கள். அக்குழு, தீண்டப்படாதோர் மேற்கொண்டுள்ள கோயில் நுழைவை தடுக்குமாறு மாநில சர்க்காரை வேண்டிக் கொண்டிருக்கிறது.

மத்திய பாரத்தில் அமுலில் உள்ள அரிஜன சங்கடம் தவிர்க்கும் சட்டம், ஜயினக் கோயில்களில் தீண்டப்படாதோர் நுழைவதை அனுமதிக்கவில்லை என, மார்வாரி செயற்குழுவின் தலைவர் அறிவிக்கிறார்.

## ஒரு வெற்றிலையின் விலை எட்டு அணா!

### மேற்கு பாகிஸ்தானில் விற்கப்படுகிறது!

லாகூர், ஜூலை 11—

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வெற்றிலையை விமான மூலம் தான் மேற்கு பாகிஸ்தானுக்கு அனுப்ப வேண்டும் என்று, பாகிஸ்தான் மத்திய சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருந்தது. அதன் விளைவாக மேற்கு பாகிஸ்தானில் ஒரு வெற்றிலையின் விலை எட்டு அணாவாக விற்கப்படுகிறது. 200 வெற்றிலை கொண்ட ஒரு கட்டு ரூ. 50 க்கு விற்கப்படுகிறது!

அதற்காகத் தரப்படும் விமானக் கட்டணம், வெற்றிலையின் விலையை மேற்கண்டவாறு உயர்த்திவிட்டிருக்கிறது!

பெர்லின்:

ஜூன் திங்களில் பெய்த பெருமழையின் காரணமாய் நான்கு ஐரோப்பிய நாடுகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆஸ்திரியாவும், ஜெர்மனியும் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறதாம்; இந்த நாடுகளில் 14 பேர் வெள்ளத்தில் மூழ்கிப் போனார்கள் என்று தெரிகிறது.

அம்மான்:

ஜோர்டான் நாட்டை இஸ்ரேல் தாக்குமென்றால், லிபியாவும், சிரியாவும் ஜோர்டானுக்கு இராணுவ உதவி அளிக்கத் தயார் என்று தெரிவித்திருக்கின்றன. ஜோர்டானின் உள்நாட்டு பாதுகாப்புப் படைக்கு பொருளாதார உதவியும் செய்ய மேற்படி இரு நாடுகளும் ஒப்புதல் தந்திருக்கின்றன.

## லீகிலிருந்து விலகினார்!

முஸ்லிம் லீக் மாநாட்டை ஒத்திப் போட்டதை ஆட்சேபித்து லீக் காரியக் கமிட்டியிலிருந்து சர்தார் அப்துர் ரப் நிஷ்டார் ராஜினாமா செய்து விட்டார் என்று தெரிகிறது. முஸ்லிம் லீகிற்குப் புத்துயிரூட்ட அம்மாநாடு இம்மாதம் நடைபெறுவதாக இருந்தது.

# திரு-கொச்சியில் தமிழர் போராட்டம் வலுக்கிறது

## 8 பெண்கள் உள்பட 320 பேர் கைது

நாகர் கோவிலில் நடைபெற்ற கூட்டமொன்றில் திருவாங்கூர்—கொச்சி சட்டசபையைச் சேர்ந்த தமிழ்நாடு காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் கோர்ட் கட்டளை அடங்கிய ஒன்றையும், திரு—கொச்சி சர்க்கார் கெஜட் ஒன்றையும் எரித்தார் என்று தெரிகிறது.

திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் ஆரம்பித்த விடுதலை இயக்கத்தின் தனிநபர் சத்தியாக்கிரகத்தின் அறிகுறியாகவே அவை எரிக்கப்பட்டன என்று தெரிகிறது.

சட்டசபை உறுப்பினரும் தமிழ்நாடு காங்கிரஸ் உறுப்பினருமான குஞ்சன் நாடார், இதுவரை, எட்டு பெண்கள் உள்பட 320 பேர் தேவிகுளத்தில் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், அண்மையில் நடைபெறப் போகும் திரு—கொச்சி சட்டசபைக் கூட்டத்தை திரு—தமிழ்நாடு காங்கிரஸ் உறுப்பினர்கள் பகிஷ்கரிக்க வேண்டுமென்று சத்தியாக்கிரகக் குழு முடிவு செய்துவிட்டதாகவும் கூறினார்.

செங்கோட்டையில் திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ராமசாமி பிள்ளை, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் எஸ். என். வைரவனைச் சந்தித்து, தமிழர் போராட்ட விபரங்களைப் பற்றிக் கூறினார் என்று தெரிகிறது.

# பிள்ளையார் கோயில் திறப்பு விழா, 17 நாட்களில், அஸ்திவாரக் கல் நாட்டு விழாவாக மாறிப்போன விந்தை!

## கடிதத்தைப் புகைப் படமாக்கிப் பிரசுரித்தாலும்.........! ‘தினத் தந்தி’ செய்தி பித்தலாட்டம் பித்தலாட்டமே!

### மாகாணக் காங்கிரஸ் உறுப்பினர் தகவலை மறுக்க ‘தினத் தந்தி’ சிருஷ்டித்த ராமசாமியால் முடியாது!

‘புதிய பிள்ளையார் கோயிலைத் திறக்க அண்ணாதுரைக்கு அழைப்பு’ எனப் பெரிய தோர் தலைப்பிட்டு, கற்பனைச் செய்தி ஒன்றை, 24—6—54-ல் சென்னையில் வெளியான ‘தினத் தந்தி’ வெளியிட்டிருந்தது!

அதை மறுத்து ‘நம் நாடு’ 29-6-54-ல் குருவிக்கரம்பை ‘நமது நிருபர்’ அனுப்பிய மறுப்புச் செய்தியைப் பிரசுரித்திருந்தது.

அம்மறுப்புச் செய்தியில், பொறுப்புள்ள மாகாண காங்கிரஸ் குழு உறுப்பினரான திரு. வயிரவன் சேர்வை முதல், காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் அனைவரையும் கேட்டு நமது நிருபர் சேகரித்த தகவலை, ‘நம் நாடு’ அப்படியே தந்துள்ளது.

ஆனால், பத்துத் தினங்கள் கழித்து, ‘தினத் தந்தி’ 24—6—54-ல், வெளியிட்ட செய்திக்கு மாறாக, அதாவது, ‘புதிய பிள்ளையார் கோயிலைத் திறந்து வைக்கும் படி அண்ணாதுரைக்கு அழைப்பு’ என்று வெளியிட்டதற்கு மாறாக, ‘கோயிலுக்கு அஸ்திவாரக் கல் நாட்ட’ என்ற புதுச் செய்தியை, தான் வெளியிட்ட முதல் செய்தியை மெய்ப்பிக்க, 17 நாட்களுக்குப் பிறகு, 11—7—54-ல், ‘தினத் தந்தி’ வெளியிட முன்வந்திருக்கிறது—துணிந்திருக்கிறது!

புதிய பிள்ளையார் கோயில் திறப்பு, 17 நாட்களில், அஸ்திவாரக் கல் நாட்டுவிழாவாக மாறிவிட்டிருக்கிறது—இல்லை—‘தினத் தந்தி’யால் மாற்றப்பட்டு விட்டிருக்கிறது! ஏன் இந்த மாற்றம்? ஏன் இந்தப் பித்தலாட்டம்?

கோயில் நிர்வாகிகளில் ஒருவர் என்ற முறையில் நா. ராமசாமி கையொப்பமிட்ட ‘அறிக்கை’ எனத் ‘தினத் தந்தி’யால் கூறப்படும் கடிதம் ஒன்றையும், புகைப் படம் எடுத்து ‘தினத் தந்தி’ 11—7—54ல் பிரசுரித்திருக்கிறது.

தோழர் அண்ணாதுரைக்கு, ‘தினத் தந்தி’ குறிப்பிட்டுள்ள, அந்த நிர்வாகி ராமசாமியால் எழுதப்பட்டதாகச் சொல்லப்படும் கடிதத்தின் நகல் அல்ல—அல்லவே அல்ல—அது!

ந. ராமசாமி என்பவர் ‘தினத்தந்தி’க்கு எழுதிய கடிதத்தின் புகைப் படமேயாகும்—அது!

இப்போதுகூட, தோழர் அண்ணாதுரை அவர்களுக்கு, பழைய தேதியிட்டு எப்போவோ கடிதம் எழுதினதாகவும், அதுதான் இது எனப் புகைப்படமெடுத்து ஒரு கடிதமல்ல—பல கடிதங்கள் வெளியிட, ‘தினத் தந்தி’யால் மட்டுமல்ல—அக்குணம் படைத்த எந்த இதழாலும், சுலபமாக முடியும்.

எனவே, வெளியாகியுள்ள புகைப் படக் கடிதம், ‘தினத் தந்தி’ இத்துறையில் செய்துள்ள பித்தலாட்டத்தை மறைக்க உதவாது. ஆனால், அதை மேலும் ஐயத்திற்கிடமின்றி விளக்கவே உதவும்—அதைத்தான் செய்திருக்கிறது பிரசுரமாகியுள்ள புகைப் படக் கடிதம்!

வைபவம் நிறுத்தப்பட்டதாம்! நிறுத்தப்பட்ட பிறகு அண்ணாதுரைக்கு அழைப்பாம்! வைபவம் நிறுத்தப்பட்ட பிறகு அழைப்பு எதற்கு அனுப்புவது? ‘தினத் தந்தி’யின் நுண்ணறிவுக்குத்தான், இது புலனாகும் போலும்! (ஆ-ர்.)

★

### புதிய பிள்ளையார் கோயிலை திறக்க அண்ணாதுரைக்கு அழைப்பு!

காங்கிரஸ்காரர்கள் எதிர்ப்பு!

புதிய பிள்ளையார் கோவில் ஒன்றைத் திறந்து வைக்க அண்ணாதுரையை அழைப்பதென கோவில் நிர்வாகிகள் முடிவு செய்தனர். இந்த அழைப்பை காங்கிரஸ்காரர்கள் எதிர்த்தனர்.

(நமது நிருபர்)

அதிராம்பட்டினம், ஜூன் 23

ஒரு புதிய பிள்ளையார் கோவிலை திறந்து வைக்கும்படி அண்ணாதுரைக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறது!

அதிராம் பட்டினத்திற்கு அருகில் உள்ள குருவிக்கரம்பை என்ற கிராமத்தில் புது மாதிரியாகக் கட்டப்பட்ட ஒரு பிள்ளையார் கோவிலை அண்ணாதுரை திறந்து வைக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஜூலை முதல் வாரத்தில் கோவிலை திறந்து வைக்கும்படி அழைப்பும் அனுப்பியுள்ளனர்.

—24—6—54 ‘தினத் தந்தி’

★

### ‘நம் நாடு’ நிருபர் கூறிய மறுப்பு

‘உண்மையிலேயே எங்களூரில் (குருவிக் கரம்பையில்) புதிய பிள்ளையார் கோயிலும் இல்லை; பழைய பிள்ளையார் கோயிலும் இல்லை. இது சம்பந்தமாக குருவிக்கரம்பையிலுள்ள மாகாண காங்கிரஸ் கமிட்டி மெம்பர் திரு. ஏ. வயிரவன் சேர்வை முதல், பல காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் வரை கேட்டதற்கு, “இந்த அவதூறுக்குக் காங்கிரஸ்காரர்கள் பொறுப்பல்ல; இதிலிருந்து ‘தினத் தந்தி’ செய்தி முற்றிலும் இப்படித்தானிருக்கும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்,” என்றனர். —ந. நி

—29—6—54 ‘நம் நாடு’

கெனியா, உகாண்டா, தங்கனிகா, ஜான்சிபார் ஆகிய நாடுகளின் சர்க்காரால் நியமிக்கப்பட்ட பிரிட்டிஷ் சிவில் சர்வீஸ் குழு உத்தியோக உயர்விலும்) சம்பளம் தருவதிலும் பல்வேறு இன மக்களிடையே வேற்றுமை காட்டக்கூடாது என்று சிபார்சு செய்திருக்கிறது.

★

### “அண்ணாதுரை அழைக்கப்பட்டது உண்மையே”

கோவில் நிர்வாகியின் அறிக்கை

கோவிலை ஆரம்பித்து வைக்க அழைக்கப்பட்டது பற்றிய முழு விவரம்

“கோவிலுக்கு அஸ்திவாரக் கல் நாட்ட யாரை அழைப்பது என்று அந்தக் கிராமத்தில் ஒரு தகராறு ஏற்பட்டது. பலத்த விவாதத்திற்குப் பின்னர் தி. மு. கழகப் பொதுச் செயலாளர் சி. என். அண்ணாதுரையை அழைக்கவேண்டும் என்று யோசனை கூறினர்.”

நிர்வாகிகளில் ஒருவரான நா. ராமசாமி தேவர் கடிதத்தில் கூறியுள்ளதில் ஒரு பகுதி:—

“அதை சில காங்கிரஸ்காரர்கள் எதிர்த்தார்கள், பல்வேறு காரணங்களால் வைபவம் நடைபெறவில்லை. அண்ணாதுரை அழைக்கப்பட்டது உண்மையே.”

—11—7—54 ‘தினத் தந்தி’

# பொதுக் கூட்டங்கள்

★

## மேலூர்

கீழ வீதியில்

14—7—54 மாலை 7½ மணிக்கு

தலைவர்: எஸ். எம். மாடசாமி

பேசுவோர்:

சி. பெ. கி. சம்பத்

எஸ். அப்பாவு

★

## தேரிழந்தூர்

(மாயூரம் வட்டம்)

14—7—54 புதன் மாலை

பேசுவோர்:

என். வி. நடராசன்

என். சிட்டிபாபு

கே. எஸ். சௌந்தரராசன்

கே. எஸ். சண்முகம்

## திருமணம்

14—7—54 காலை 8 மணிக்கு அறந்தாங்கி மீன் மார்க்கெட் தெருவிலுள்ள சதாசிவம் இல்லத்தில் தோழர் ரு. தி. அ. நடராசனார் தலைமையில் தோழர் ரு. அ. வேலழகன்—தோழியர் செயலட்சுமி திருமணம் நடைபெறும். தோழர்கள் வா. ச. இராமலிங்கம், பொ. சொக்கலிங்கம், ரு. இராமசாமி மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர்.

வாஷிங்டன்:

சீனா ஐ. நா. சபையில் சேர்க்கப்பட்டால், அமெரிக்காவில் ஏற்படும் நிலைமைகளைச் சமாளிக்க தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று அமெரிக்க ஜனாதிபதிக்கு கட்டளையிடும் தீர்மானம் ஒன்று அமெரிக்க மேல் சபையில் வெளி விவகாரக் குழு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

இராவிடர் முன்னேற்றக் கழகத் தலைவர் தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அறிவகம் அச்சகத்தில் அச்சிடப்பெற்று (56, குளக்கரை நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.